# எளியோர் எழுச்சி

அறிவு விடுதலைக்கே
அகல் மையம்

உயர்வுக்கும்! மாண்புக்கும்! விடுதலைக்கும்!
அருந்ததியர் மக்கள் நலச் சங்கம்



இதழ் - 01 மார்ச் - 2020

# இந்திய அரசியலமைப்பின் முகவுரை

இந்திய மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு இறையாண்மை வாய்ந்த, சமதர்ம நெறி சார்ந்த, மதச்சார்பற்ற, மக்களாட்சிக் குடியரசாக அமைக்கவும், அதன் குடிமக்கள் அனைவருக்கும் சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல் நீதியும், சிந்தனை வெளிப்பாட்டில் நம்பிக்கையும், பற்றார்வத்தில் மற்றும் வழிபாட்டில் சுதந்திரமும், தகுதி நிலையில் மற்றும் வாய்ப்பில் சமத்துவமும், உறுதியாகக் கிடைக்கச் செய்யவும், தனி ஒருவரின் மாண்புக்கும், நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிக்கும் உறுதியளிக்கும் உடன் பிறப்புணர்வை அவர்கள் அனைவரிடையே வளர்க்கவும், விழுமிய முறைமையுடன் உறுதி பூண்டு,

1949, நவம்பர் இருபத்து ஆறாம் நாளாகிய இன்று நம்முடைய அரசியலைப்புப் பேரவையில், இந்திய அரசியலமைப்பை ஏற்று, சட்டமாக இயற்றி, நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்

# அகல் உறுதி மொழி

நான் பிறந்த மண்ணுக்கும்,
தலித் என்ற சொல்லுக்கும்
வீரம் உண்டு!
இந்த இனத்தில் பிறந்ததற்காக நான் பெருமைப்படுகிறேன்.
என்னை ஈன்ற தாயின் மணிவயிறு புனிதமானது.
அந்தப் புனிதத்திற்கு கலங்கம் ஏற்பட்டால்
நான் பொங்கி எழுவேன்!
நான் பிறப்பால் தாழ்ந்தவள்/ன் அல்ல,
அநீதியான சமூகத்தால் தாழ்த்தப்பட்டேன்.
இந்த வரலாற்றை மாற்ற
மாமேதை காட்டிய வழியில் கல்வி கற்பேன்.
கற்பது என் கடமை!
கற்பது என் உரிமை!
கற்பிப்பது எனது லட்சியம்!
உறுதி...! உறுதி...!
ஒரு நாள் நான் உயர்வது உறுதி!

ஜெய்பீம்!

# பொருளடக்கம்


01. ஆசிரியர் முழக்கம் .................................................. 2

02. மேன்மைமிகு சமூக மாற்றத்தின் முகவர்களே! ....... 4

03. 'நொறுக்கப்பட முடியாதவர்கள் நாங்கள்' .................. 6

04. தண்ணீருக்கும் தடை, பாதைக்கும் தடை ................. 8

05. நிரந்தர இடுகாடு மற்றும் இடுகாட்டுப்
பாதை வேண்டி உள்ளிருப்பு போராட்டம் .................. 11

06. அநீதிக்கு ஒரு நீதி வேண்டி ......................................17

07. வாழும் இடத்திலும் பிரச்சனை, மாற்று
இடத்திலும் பிரச்சனை .............................................. 22





அருந்ததியர் மக்கள் நலச் சங்கக் கொடி

# ஆசிரியர் முழக்கம்


**ஆசிரியர்**
அருள்பணி. இராயப்பன் சே.ச.

**துணை ஆசிரியர்**
சகோ. அமல்ராஜ் சே.ச.

**ஆசிரியர் குழு**
அருள்பணி. மரியநாதன் சே.ச.
அருள்பணி. இராயப்பன் சே.ச.
சகோ. அமல்ராஜ் சே.ச.
செல்வி. கரோலின்.
செல்வன். மாதவன்.
திரு. ஆசைத்தம்பி.
செல்வன். கார்த்தி.

**அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் மேலாளர்**
அருள்பணி. மரியநாதன் சே.ச.

**கணினி வடிவமைப்பாளர்**
செல்வன். கார்த்தி.

**தட்டச்சு**
அருள்பணி. இராயப்பன் சே.ச.
செல்வி. கரோலின்.
செல்வன். மாதவன்.
திரு. ஆசைத்தம்பி.
செல்வன். கார்த்தி.

**அலுவலகம்**
அகல் மையம்,
திண்டிவனம் ரோடு,
சந்தை மேடு,
கீழ்பென்னாத்தூர்,
திருவண்ணாமலை,
604 601.

**மின் அஞ்சல்**
ahalmaiyam@gmail.com

**தொலைபேசி**
7812831938


## அன்று

2007 ஆம் ஆண்டு சகோ. அருள்துரை அவர்களால், இளையோருடைய சிந்தனையைக் கூர்மைப்படுத்தவும், இளையோருடைய திறமையை வெளிப்படுத்தவும் ‘இளையோர் எழுச்சி’ என்ற இதழானது மூன்று மாதத்திற்கு ஒரு முறை அகல் மையத்தால் வெளியிடப்பட்டது. 2007 முதல் 2019 வரை பல தலைப்புகளில் சமூக மாற்றத்தைக் கொண்டு வர மொத்தம் 22 இதழ்களை அகல் மையம் ‘இளையோர் எழுச்சி’ என்ற பெயரில் வெளியிட்டுள்ளது.

## இன்று

இப்பொழுது அதே ‘இளையோர் எழுச்சி’ இதழானது, அடுத்த கட்ட நகர்வாக, ‘எளியோர் எழுச்சி’ என்ற பெயரில் உங்கள் கைகளில் தவழ வந்துள்ளது. விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சுற்றியுள்ள அருந்ததிய மக்களுக்கு இழைக்கப்படும் சாதிய, தீண்டாமை வன்கொடுமைகளை உலகறியச் செய்யவும், புரையோடிக்கிடக்கும் சாதிய, தீண்டாமை வன்கொடுமை களை வேரறுக்க அகல் மையம் எடுத்த கூட்டு முயற்சிகளையும், கையாண்ட யுக்திகளையும் வெளிக் கொணரும் விதமாக ‘எளியோர் எழுச்சி’ என்ற இதழானது வெளியிடப்படுகிறது.

விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலைப் பகுதியில் வசிக்கும் அருந்ததிய மக்கள் பல ஆண்டுகளாக சாதிய, தீண்டாமை வன்கொடுமைகளுக்கு ஆளாகிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இது வரை சாதிய, தீண்டாமை வன்கொடுமைகள் சம்பந்தமாக எந்தவொரு வழக்கும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படவுமில்லை. எந்தவொரு செய்தியும் வெளிவந்ததுமில்லை. அரசு அதிகாரிகளால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவுமில்லை. பல தலைமுறைகளாக அருந்ததியர்கள் நிலமில்லாமல், வீடில்லாமல், அடிப்படை வசதி இல்லாமல், குழந்தைகளுக்கு கல்வி இல்லாமல், பரம்பரைத் தொழிலைச் செய்து அடிமை வாழ்க்கை வாழ்ந்து கொண்டு வந்திருக்கிறார்கள்.

அகல் மையம் மற்றும் பல தோழமை அமைப்புகளின் முன்னெடுப்புகளால் இன்று அருந்ததிய சமூகத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுக்கு கல்வி கற்றவர்களாகவும், பரம்பரைத் தொழிலை விட்டு மாற்றுத் தொழில் செய்பவர்களாகவும், சொந்த நிலப்பட்டா வைத்திருப்பவர்களாகவும், சொந்த வீடு வைத்து இருப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

அன்று முதல் இன்று வரை அருந்ததியர்கள் பகுதி இன்னும் காலனியாகவே இருக்கிறது. இன்னும் அடிப்படை வசதிகளான தண்ணீர், தெருவிளக்கு, பாதை, சுடுகாடு ஆகிய எதுவும் இல்லாமல் மற்றவர்களையே சார்ந்து வாழக் கூடிய நிலைமை தான் இன்றளவும் இருக்கிறது. மற்றவர்களைச் சார்ந்து வாழ்வதே அவர்களின் விடுதலைக்குத் தடையாக இருக்கிறது. இந்நிலை மாற 'எளியோர் எழுச்சி' கட்டாயம் ஒரு கருவியாக அமையும் என்பதே அகல் மையத்தின் நம்பிக்கை.

தொடர்ந்து போராடுவோம்!
ஒரு நாள் சமூக மாற்றம் காண்போம்!

**அருள்பணி. இராயப்பன் சே.ச.**

# மேன்மைமிகு சமூக மாற்றத்தின் முகவர்களே!

நாம் வாழும் இச்சமூகம் இரட்டை உருவம் கொண்டது. ஒன்று நிஜ சமூகம் மற்றொன்று நிழல் சமூகம். நிஜ அல்லது வெளித்தோற்ற சமூகம் தன்னை ஒரு யோக்கியனாக, எல்லோரும் சமம் என்பதாக, எல்லாமும் எல்லோருக்கும் பொது என்பதாக, எல்லாமும் நீதியின்படிதான் நடப்பதாக தன்னையே வெளிக்காட்டிக் கொள்கிறது. ஆனால் சற்று கூர்ந்து கவனித்தால், ஒருதலை சார்பாக, ஆதிக்க சாதியினருக்கும் அதிகாரத்தில் இருப்போருக்கும் அடாவடி செய்பவர்களுக்கும் வளைந்து கொடுப்பதாகவும், மற்றவர்களுக்கு எட்டாததாகவும், ஏன் எதிரியாகவும் இருப்பதை நம்மால் அறிய முடியும்.

இங்கு பொது விநியோகக் கூடம், பொதுக் கிணறு, பொதுப் பாதை, பொது இடம், பொதுச் சட்டம் என்று பல பொதுமைப் படுத்தப்பட்டவைகள் உள்ளன. ஆனால் விளிம்புநிலை மக்கள் ‘நாங்களும் பொதுமையில் உரிமை கொண்டவர்கள்' என நினைத்தாலோ, கேட்டாலோ அல்லது பங்கேற்றாலோ பொதுமை இவர்களை விலக்கியும், விலகியும் நிற்கிறது. ஆக, 'பொது என்பது யாருக்குப் பொது? எப்போது பொது? எந்த அளவுக்குப் பொது? எங்கெங்கே பொது?' போன்ற கேள்விகள் இயல்பாக எழுகின்றன. இதுதான் இன்றைய நிழல் சமூகம். அது அறிவர் அம்பேத்கார் சொல்வதைப்போல 'சமூக' சனநாயகம் அற்ற சமூகம்.

எனவே கல்வி வழி விழிப்புணர்வு பெற்ற விளிம்புநிலை மக்கள் வெகுண்டெழும்போது நிழல் சமூகத்தின் இருள் உடைத்து அகற்றப்படும். சமூக அக்கறையோடு ஒற்றுமையாகத் தோன்றும் இயக்கமானது சமூக சனநாயகத்தின் ஆயுதமாகத் திகழும் என்பதே நம் களப் போராட்டங்கள் தெரியப்படுத்தும் உண்மை. அறிவர் அம்பேத்கார் தனது தாரக மந்திரத்தால் உணர்த்தியிருப்பது போல, 'போராடி ஒன்று சேரும் இயக்கம் சமூகத்தைப் புரட்டிப்போடும்! புரட்சியைத் செய்தே தீரும்!' என்பதும் நமது சமீப அனுபவமாக இருக்கிறது.

காலத்தின் மாற்றங்களையும், நமது சமூக உரிமைகளையும் கருத்தில் கொண்டு நாம் நம் சமூகத்திற்கு விசுவாசமாகவும், அக்கறையாகவும் இருப்போம். ஏனென்றால் நம் ஒவ்வொரு செயல்பாடும் நம் அடுத்த தலைமுறையின் வளர்ச்சிக்கானப் படிக்கட்டுகள், முன்னேற்றத்திற்கான முன்னெடுப்புகள், மேம்பாட்டிற்கான வழிவகைகள் மற்றும் வலுப்பெறுவதற்கான யுக்திகள். எனவே நம் சமூக மாற்றத்திற்காக, நம் அடிமை மனநிலையை மாற்றுவோம். நம் மனநிலை மாற்றம், நம் சமூகத்திற்கு எழுச்சியோடு மாண்பைத் தரட்டும்.

என்றும் எழுச்சிக்காக
உங்களுடன் சமூகக் களத்தில்

**அருள்பணி. மரியநாதன் சே.ச.**

# 'நொறுக்கப்பட முடியாதவர்கள் நாங்கள்'

“ஒருவர் எளியோராய் இருக்கிறார் என்று அவரை வஞ்சிக்காதே. ஏனெனில் ஆண்டவர் அவர்களுக்காக வாதாடுவார். அவர்களது உயிரை வாங்கப் பார்க்கின்றவர்களின் உயிரை அவர் பறித்துக்கொள்வார்”. (நீதிமொழிகள் 22:22 -23)

நம் எண்ணம், சொல், செயல், வாழ்க்கை, நலம், சுயமதிப்பு, தன்மானம், நம் உரிமை இவைகள் மறுக்கப்படும்போது உரிமைக் குரலை பட்டி தொட்டி எங்கும் ஒலிக்கச் செய்வது மிக அவசியம். கனவு உலகத்தில் வாழும் நேரம் முடிவடைந்துவிட்டது. நடை முறை உலகத்தோடு இணைந்து வாழ, தடைகள் ஏற்படின், முட்டி மோதி. 'நாங்கள் எதற்கும் சளைத்தவர்கள் அல்ல' என்பதை மனதில் நிறுத்தி, 'நொறுக்கப்பட முடியாதவர்கள் நாங்கள்' என்ற கோட்பாட்டோடு வாழ்க்கை ஓட்டத்தை தொடங்க, ஓர் உத்வேகம் தரக்கூடிய நூலாக 'எளியோர் எழுச்சி' இன்று பிறப்பெடுக்கிறது. இது வார்த்தைகள் அல்ல. மாறாக உணர்ச்சிகள். வரக்கூடிய தலைமுறையினர் தலை நிமிர்ந்து வாழ, இப்புத்தகம் ஒரு வரப்பிரசாதம்.

“எண்ணிய முடிதல் வேண்டும்; நல்லனவே எண்ணல் வேண்டும்; திண்ணிய நெஞ்சம் வேண்டும்; தெளிந்த நல் அறிவு வேண்டும்” என்று முண்டாசுக் கவிஞன் பாரதி முழங்கினான். தெளிந்த கல்வியைப் பெற்று அதன் மூலம், விடுதலையின் மனிதர்களாக வாழ, “அறிவு விடுதலைக்கே” என்னும் விருது வாக்கோடு அகல் மையம் செயல்படுவது தகுதியும், நீதியும் ஆகும்.

கேள்விக் குறியாய் கூனிக்குறுகி நிற்கும் எளியோரின் வாழ்வை
ஆச்சரியக்குறியாய் நிமிரச் செய்ய,
முகவரியற்ற பல முகங்களுக்கு புது முகவரி கொடுக்க,
மனித நேய மதிப்பீடுகளை வாழச் செய்ய,
அறியாமை என்னும் இருளை நீக்க,
ஞானத்தின் ஒளியினைக் காண,
அருட்செல்வத்தின் ஆழம் அறிய,
பொருட்செல்வத்தின் பயன்பாட்டில் பாங்குற,
அறிவுக்கண் திறக்கப்பட,
தன்மானத்தோடு வாழ,
அகலைப் பயன்படுத்துங்கள்!
வாழ்வில் ஒளியைப் பெற்றிடுங்கள்!

அருள்சகோ. அமல்ராஜ் சே.ச.

**அருந்ததியர் மக்கள் நலச் சங்க முத்திரை**

# தண்ணீருக்கும் தடை பாதைக்கும் தடை

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தாலூக்காவில் ஆனந்தாங்கல் என்ற கிராமம் அமைந்துள்ளது. இங்கு 30 அருந்ததிய குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வாழும் பகுதியின் அருகில் வன்னியர் சமூகத்தினைச் சார்ந்த ஒரு குடும்பம் வசித்து வருகின்றது. 24.08.2015 அன்று ஆனந்தாங்கலில் வசிக்கும் அருந்ததிய குடும்பங்களுக்காக அரசு சார்பில் ஒரு நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்பட்டது. இந்த நீர்த்தேக்கத் தொட்டியில் அருந்ததிய மக்கள் தங்கள் தேவைக்காகக் குடிநீர் எடுத்துக் கொண்டு வந்துள்ளனர்.



ஆனால் கடந்த ஆறு மாதங்களாக (டிசம்பர் - மே, 2019) வன்னியர் குடும்பத்தில் வசிக்கும் பச்சையப்பன் மற்றும் முனுசாமி ஆகிய இருவரும் அருந்ததியருக்கென்று அரசால் அமைத்துத்தரப்பட்ட நீர்த் தேக்கத் தொட்டியில் அருந்ததிய மக்களைத் தண்ணீர் எடுக்க விடாமல் தடுத்து வந்துள்ளனர். ‘சக்கிலி யாரும் இங்க வந்து தண்ணி எடுக்கக் கூடாது’ என்றும், ‘இந்த நீர்த்தேக்கத் தொட்டி எங்க நிலத்துக்கு பக்கத்துல இருக்குறதால இது எங்களுக்குத் தான் சொந்தம்’ என்றும் ‘உங்களுக்கெல்லாம் தண்ணி வேணும்னா ஏன் கூட வந்து படுங்கடி!' என்றும் தகாத வார்த்தைகளால் குடிநீர் பிடிக்க வந்த அருந்ததியப் பெண்களை வன்னிய குடும்பத்தினர் அவமானப்படுத்தி அனுப்பியுள்ளனர்.

மேலும் 40 (1979 – 2019) வருடங்களாக அருந்ததிய மக்கள் ஆனந்தாங்கலில் இருந்து ‘வடபாலை’ என்ற கிராமத்திற்கு செல்வதற்காக ஒரு பொதுப் பாதையினைப் பயன்படுத்தி வந்துள்ளனர். அந்தப் பாதையானது வன்னியர் குடும்பம் வாழும் பகுதிக்கு அருகாமையில் உள்ளதால் ‘இது என்னுடைய நிலம்’ என்றும் ‘சக்கிலி யாரும் இந்தப்பக்கம் வரக்கூடாது’ என்றும் கூறி பாதை முழுவதும் கற்கள் மற்றும் முற்செடிகளை வைத்து,

வழியை மறைத்து, அருந்ததிய மக்களை வன்கொடுமைக்கு ஆளாக்கியுள்ளனர்.

ஆனந்தாங்கல் மக்களுக்கு ஏற்பட்ட வன்கொடுமையானது அகல் மையத்திற்கு தெரியவந்ததும், அகல் பணியாளர்கள் ஆனந்தாங்கலுக்குச் சென்று, கள ஆய்வு செய்து வன்கொடுமையைப் பற்றி அருந்ததிய மக்களிடம் கேட்டறிந்தார்கள். அகல் மையத்தோடு சேர்ந்து பணியாற்றும் தலித் விடுதலை இயக்கத் தலைவர் மதிப்பிற்குரிய தலித்.ஞானசேகரன் அவர்களை அகல் பணியாளர்கள் சந்தித்து ஆனந்தாங்கல் அருந்ததிய மக்களுக்கு ஏற்படும் வன்கொடுமைகள் பற்றி எடுத்துக் கூறினார்கள்.



அகல் பணியாளர்களும், தோழமை அமைப்புகளான தலித் விடுதலை இயக்கமும் இணைந்து ஆனந்தாங்கல் அருந்ததிய மக்களின் குடிதண்ணீர் மற்றும் பாதை பிரச்சனை தொடர்பாக மேல்மலையனூர் வட்டாட்சியரிடம் மனு கொடுக்கச் சென்ற போது வட்டாட்சியர் 'நீங்க எந்த ஊர்? எந்த இடம்?' என்று கேட்டவுடன் மக்கள் அனைவரும் நாங்கள் 'அருந்ததிய சமூகத்தைச் சார்ந்தவர்கள்' என்று கூறியவுடன், மக்கள் அனைவரையும் நிற்க வைத்து தான் பேசினார். வட்டாட்சியர் 'இந்தப் பிரச்சனைய நான் பாத்துக்கிறேன். நீங்க போகலாம்' என்று அசட்டுத்தனமாக பதிலளித்தார்.

ஆனந்தாங்கல் அருந்ததிய மக்கள் அனைவரும் மேல்மலையனூர் வட்டார வளர்ச்சி அலுவலரைச் சந்தித்து தங்களுக்கு ஏற்பட்ட வன்கொடுமைத் தொடர்பாகவும், நிரந்தரமாக குடிநீர்த்தேவையைப் பூர்த்தி செய்து தரவேண்டுமென்றும் மனு கொடுத்தார்கள். அதற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் 'குடிநீர் பிரச்சனைய நான் பார்த்துக்கிறேன். உங்களுக்கு ஏற்பட்ட வன்கொடுமை தொடர்பாக நீங்க காவல் நிலையத்தில் புகார் கொடுங்க' என்று கூறினார். இதன் பிறகு ஆனந்தாங்கல் அருந்ததிய மக்கள் அனைவரும் இணைந்து

அவலூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் ஒன்றை பதிவு செய்தனர். அதற்கு காவல் உதவி ஆய்வாளர் இளங்கோவன் 'பிரச்சனைக்கு காரணமான பச்சையப்பனையும், முனுசாமியையும் கூப்பிட்டு நான் விசாரிக்கிறேன்'என்று கூறி விட்டு மக்களை அனுப்பி வைத்தார். வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யாமல் மாறாக 'கூப்பிட்டு விசாரிக்கிறேன்' என்று சொல்லி மக்களை ஏமாற்ற நினைத்தார். விவரமறிந்த அருந்ததிய மக்கள் நலச் சங்கத் தலைவி அக்சல்யா அவர்கள் 'அவங்கள கூப்பிட்டு விசாரிக்கலனா நாங்க மேலிடத்தில புகார் செய்வோம்!' என்று கூறியவுடன் காவல் உதவி ஆய்வாளர் இளங்கோவன் இரண்டு காவலர்களை அழைத்து பச்சையப்பனையும், முனுசாமியையும் அழைத்து வரச் சொன்னார் பச்சையப்பனும், முனுசாமியும் உடனே அழைத்து வரப்பட்டு ஆனந்தாங்கல் அருந்ததிய மக்களுக்கு முன்னால் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையின் இறுதியில் பச்சையப்பனும், முனுசாமியும் அருந்திய மக்களுக்கு முன்னால் மன்னிப்பு கேட்டும், 'இனிமேல் எந்த ஒரு பிரச்சனையும் செய்யமாட்டோம்' எனவும் வாக்குறுதி அளித்தனர்.

இதன் பிறகு தலித் விடுதலை இயக்கத்தோடு சேர்ந்து அகல் மையப் பணியாளர்களும் மற்றும் ஆனந்தாங்கல் அருந்ததிய மக்களும் இணைந்து விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் ஆதிதிராவிடர் நலத்துறை, விழுப்புரம் மாவட்ட தலைமை நீதிபதி ஆகியோரை சந்தித்து மனுக்கள் கொடுத்தனர்.

தற்போது அங்கு வாழும் அருந்ததிய மக்கள் எந்த இடையூறுமின்றி குடிநீர் எடுத்தும் பொது பாதையினைப் பயன்படுத்தியும் வருகின்றனர்.



தங்களின் ஒற்றுமையின் பலத்தினை அறிந்ததால் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும், தங்கள் உரிமைகளைத் தாங்களே பெற்றுக்கொள்ளவும், தங்களை ஓர் இயக்கமாகக் கட்டமைத்துக் கொண்டு 'அருந்ததியர் மக்கள் நலச் சங்கம்' என்ற பெயரிலே சிறப்பாக இயங்கியும் வருகின்றனர்.

திரு.ஆசைத்தம்பி
விழுப்புரம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்

# நிரந்தர இடுகாடு மற்றும் இடுகாட்டுப் பாதை வேண்டி உள்ளிருப்பு போராட்டம்

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தாலுக்காவில் உள்ள தேவதானம்பேட்டை கிராமத்தில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட அருந்ததிய சமூகத்தைச் சார்ந்த இரத்தினமேரி (வயது70) அவர்கள் 09-11-2019 அன்று இறந்தார், இதுவரை தேவதானம்பேட்டை கிராமத்தில் அருந்ததிய மக்கள் ‘பொந்தேரி’ எனும் ஏரியில் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வது வழக்கம். இந்த வருடம் பருவமழையின் காரணமாக கல்லறைக்கு மேல் ஒரு ஆள் உயரத்திற்கு தண்ணீர் நிரம்பி விட்டதால் இறந்த இரத்தினமேரியின் உடலை



அக்கல்லறையில் அடக்கம் செய்ய முடியவில்லை. ஆகவே தேவதானம்பேட்டை அருந்ததிய மக்கள் கவுண்டர் சமூகத்தைச் சார்ந்த ஊர் பெரியோர்களிடம் இரத்தினமேரியின் உடலை அடக்கம் செய்ய முறையிட்டார்கள்.

கவுண்டர் சமூகத்தைச் சார்ந்த ஊர் பெரியவர்கள் கலந்து ஆலோசித்து ஏரிக்கரையின் ஒரு மூலையில் புதைக்க பரிந்துரை செய்தனர். ஆனால் அந்த இடமும் தண்ணீர் நிறைந்த பகுதியாக இருந்தது. இதனால் வருவாய் வட்டாட்சியரிடம் முறையிட்டார்கள். 10-11-2019 அன்று வரை கிராம நிர்வாக அலுவலரும் மற்றும் வருவாய்

வட்டாட்சியரும் கவுண்டர் இன மக்கள் பரிந்துரை செய்த அதே இடத்தை மீண்டும் பரிந்துரை செய்துகொண்டு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால், தேவதானம்பேட்டை அருந்ததிய மக்கள் வட்டாட்சியரிடம் முறையிட்டார்கள்.

10-11-2019 அன்று வரை இறந்த இரத்தினமேரியின் உடலை அடக்கம் செய்யாமல் தேவதானம்பேட்டை அருந்ததிய மக்கள் இடுகாட்டுக்கும், இடுகாட்டுப் பாதைக்காகவும் பேராடிக் கொண்டிருந்தார்கள்.



தேவதானம்பேட்டை அருந்ததிய மக்களின் கோரிக்கையை முன்னிட்டு கிராம நிர்வாக அலுவலரும், நில அளவீட்டாளரும், வருவாய் வட்டாட்சியரும், துணை வட்டாட்சியரும், வட்டாட்சியரும் இணைந்து 'அரசுக்கு சொந்தமான நிலம் இருக்கிறதா?' என ஆராய்ந்த பொழுது ஆதிக்கச் சாதியினர் (கவுண்டர்) ஒருவர் அரசுக்குச் சொந்தமான இடத்தில் விவசாயம் செய்து வந்ததைக் கண்டறிந்தார்கள்.

அரசுக்குச் சொந்தமான அந்த இடத்தில் இறந்தவரின் உடலை அடக்கம் செய்ய வேண்டுமென்றால் ஆதிக்க சாதியினரின் குடியிருப்பு பகுதி வழியாகச் செல்ல வேண்டும். ஆகவே கிராம நிர்வாக அலுவலரும், நில அளவீட்டாளரும், வருவாய் வட்டாட்சியரும், துணை வட்டாட்சியரும்,

வட்டாட்சியரும் இணைந்து அரசுக்குச் சொந்தமான நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ள ஆதிக்கசாதியினரிடம் (கவுண்டர்) பரஸ்பர பேச்சுவார்த்தை நடத்தி, விவசாயம் செய்து வந்த (அரசுக்கு சொந்தமான) இடத்தில் இறந்த இரத்தினமேரியின் உடலை அடக்கம் செய்யவும், ஆதிக்க சாதியினரின் (கவுண்டர்) குடியிருப்பு பகுதி வழியாக இறந்தவரின் உடலை எடுத்துச் செல்லவும், கிராம நிர்வாக அலுவலரும், வட்டாட்சியரும் பரிந்துரை செய்த போது ஆதிக்க சாதியினர் (கவுண்டர்) இதற்கு மறுப்பு தெரிவித்தனர்.



ஆதிக்க சாதியினர் (கவுண்டர்) மறுப்பு தெரிவித்திருந்த போதிலும், 12-11-2019 அன்று வேறுவழியின்றி காவல்துறை, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வட்டாட்சியர்களின் துணையோடு ஆதிக்க சாதியினரால் (கவுண்டர்) ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள நிலத்தில் இறந்த இரத்தினமேரியின் உடலை அடக்கம் செய்யவும், ஆதிக்க சாதியினரின் (கவுண்டர்) குடியிருப்பு பகுதி வழியாக அவரின் உடலை எடுத்துச்

செல்லவும் திட்டமிடப்பட்டது, இதனை அறிந்த ஆதிக்க சாதியினர் (கவுண்டர், ஆதி திராவிடர்) தேவதானம் பேட்டை அருந்ததிய மக்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டு ஆயுதங்களை மறைத்துவைத்துக் காத்துக் கொண்டிருந்தனர்.




இதனை சற்றும் அறியாத தேவதானம்பேட்டை அருந்ததிய மக்கள், காவல் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர் மற்றும் தோழமை அமைப்புகளான தலித் விடுதலை இயக்கம், ஆதித்தமிழர் கட்சி, அருந்ததியர் மக்கள் நலச் சங்கத்தின் துணையோடு இறந்த இரத்தினமேரியின் உடலை எடுத்துக் கொண்டு கிளம்பினர்.

தேவதானம்பேட்டை அருந்ததிய மக்கள் இறந்த உடலோடு, ஆதிக்க சாதியினரின் குடியிருப்புப் பகுதியை நெருங்கிய போது, ஆதிக்க சாதியினரின் தாக்குதல் திட்டத்தைப் பற்றி அறிந்து, உயிருக்குப் பயந்து வேறுவழியின்றி தண்ணீர் நிரம்பிய 'பொந்தேரி' ஏரியின் வழியாகவே இறந்தவரின் உடலை எடுத்துச் சென்று காவல்துறை, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வட்டாட்சியரால் பரிந்துரை செய்யப்பட்ட அரசுக்கு சொந்தமான இடத்தில் இறந்த இரத்தினமேரியின் உடலை அடக்கம் செய்தனர். இந்த இடத்தில் தான் ஆதிக்கச் சாதியினர் விவசாயம் செய்து வந்தனர்.

தேவதானம்பேட்டை அருந்ததிய சமூகத்தைச் சார்ந்த இரத்தினமேரியின் உடலைப் (ஆதிக்கச் சாதியினர் ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்து வந்த இடத்தில்) புதைத்ததைப் பொறுத்துக்கொள்ள முடியாத ஆதிக்கச் சாதியினர் (கவுண்டர், ஆதிதிராவிடர்) அருந்ததிய மக்கள் மீது வன்மம் வைத்துக் கொண்டு அவர்களை அடித்து, ஊரை விட்டு விரட்ட திட்டமிட்டு இருந்தார்கள். இதனால் தேவதானம்பேட்டை அருந்ததிய மக்கள் உயிருக்குப் பயந்து வீட்டிலேயே முடங்கிக் கிடந்தனர். அவர்களால் எங்கும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு இருந்தது.



செஞ்சி அருகே

## சடலங்களை அடக்கம் செய்ய நிரந்தர இடம் கேட்டு போராட்டம்

செஞ்சி, நவ. 13: விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே தேவதானம்பேட்டை கிராமத்தை சேர்ந்தவர் கண்ணு மனைவி ரத்தினமேரி (70). அருந்ததி சமூகத்தை சேர்ந்த இவர் சென்னையில் மகனுடன் வசித்து வந்தார். இந்நிலையில் அங்கு உடல்நிலை சரியில்லாமல் ரத்தினமேரி இறந்துவிட்டார். இதையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊரான தேவதானம்பேட்டையில் தகனம் செய்ய உடலை எடுத்து வந்தனர். ஏரிக்கரையோரம் உள்ள இடுகாட்டில் தண்ணீர் நிரம்பி இருந்ததால் அடக்கம் செய்ய முடியவில்லை. இதையடுத்து பக்கத்தில் உள்ள புறம்போக்கு இடத்தில் இடம் ஒதுக்கி தர வேண்டும் என செஞ்சி தாசில்தாருக்கு கோரிக்கை விடுத்தனர். தாசில்தார் கோவிந்தராஜ் மற்றும் வருவாய் துறையினர் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டு, அந்த இடத்தில் பயிர் செய்து வந்த நபரிடம் பேச்சுவார்த்தை நடத்தி சடலத்தை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தனர்.


இருப்பினும், ஏரிக்கரையில் அடிக்கடி தண்ணீர் தேங்குவதால், நிரந்தர தீர்வாக தற்போது தேர்வு செய்யப்பட்ட இடத்தில் சுடுகாடு அமைத்து, பாதை மற்றும் மின் விளக்கு வசதி செய்து தந்தால் தான் சடலத்தை அடக்கம் செய்வோம் என அப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தினர். தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த செஞ்சி வட்டார வளர்ச்சி அலுவலர் சுப்ரமணி, போராட்டக்காரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது அவர்கள், கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தினர். பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாத நிலையில் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதால் போலீசார் அதிகளவில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்று காலையும் போராட்டக்காரர்கள் போராட்டத்தை தொடர்ந்தனர். செஞ்சி தாசில்தார் கோவிந்தராஜ் மீண்டும் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அதில் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததை தொடர்ந்து சமரசம் அடைந்த பொதுமக்கள் போராட்டத்தை கைவிட்டனர். பின்னர் மூதாட்டியின் சடலம் அடக்கம் செய்யப்பட்டது. இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இறந்தவரின் உடலை அடக்கம் செய்த மறுநாள் (13.11.19) ஆதிதிராவிடர் பகுதிக்கு தேவதானம்பேட்டை அருந்ததிய மக்கள் தண்ணீர் எடுக்கச் சென்ற போதும், கடைக்கு பொருள் வாங்கச் சென்ற போதும், ஆதிக்கச் சாதியினரின் (கவுண்டர்) பேச்சை கேட்டுக் கொண்டு 'ஆதிதிராவிடர் பகுதிக்கு தேவதானம்பேட்டை அருந்ததிய மக்கள் வரக் கூடாதென' ஆதி திராவிடர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

14.11.19 அன்று மீண்டும் ஆதிக்கச் சாதியினர் (கவுண்டர்) தேவதானம்பேட்டை அருந்ததிய மக்களிடம் ‘காலை 11 மணிக்கு வீட்டுக்கு ஒரு ஆள் கட்டாயம் பஞ்சாயத்துக்கு வரணும்’ எனவும், ‘வரலேனா வீடு புகுந்து தாக்குவோம்’ எனவும் மிரட்டியுள்ளனர். இதனையறிந்த தேவதானம்பேட்டை அருந்ததிய மக்கள் தோழமை அமைப்புகளான தலித் விடுதலை இயக்கம், ஆதித்தமிழர் கட்சி மற்றும் அருந்ததிய மக்கள் நலச்சங்கத்தின் துணையோடு தங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும்,

'அருந்ததியர் வசிக்கும் பகுதியில் Police Picketing அமைக்க வேண்டும்' எனவும், அருந்ததிய மக்களுக்கு எவ்வித பிரச்சனையுமின்றி வாழ வழிவகுத்துத் தரும்படி சத்தியமங்கலம் காவல் ஆய்வாளர், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் மாவட்ட துணைக் காவல் பொது ஆய்வாளர் ஆகியோரிடம் புகார் அளித்தார்கள்.



புகார் அளித்ததின் பெயரில் தேவதானம்பேட்டை அருந்ததிய மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான தண்ணீர் மற்றும் தெரு விளக்கு வசதிகளை 14.11.2019 அன்றே அமைத்துத் தந்தனர். 'நிரந்தர இடுகாடு, இடுகாட்டுக்கான பாதை மற்றும் பிற அடிப்படை வசதிகளைச் செய்து தருவோம்' என வாக்குறுதி கொடுத்து விட்டு இதுவரை அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ்வளவு முயற்சிக்குப் பிறகும், இன்னும் இறந்த இரத்தினமேரியின் உடல் புதைக்கப்பட்ட இடத்தில் ஏற்கனவே ஆக்கிரமிப்பு செய்து வந்த ஆதிக்க சாதியினர் (கவுண்டர்) வழக்கம் போல மீண்டும் விவசாயம் செய்து வருகிறார்கள். இது தான் தேவதானம்பேட்டை அருந்ததிய மக்களின் நிலைமை.

**செல்வன்.கார்த்தி**
திருவண்ணாமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்

# அநீதிக்கு ஒரு நீதி வேண்டி

திருவண்ணாமலை மாவட்டம், சேத்பட்டு வட்டம், காட்டுத்தெள்ளூரில் உள்ள அருந்ததியர் காலனி பகுதியில் 4 அருந்ததிய குடும்பங்கள் குடியிருந்து வருகிறார்கள். இவர்களுக்கு அருகாமையில் 40 வன்னியக் குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். நான்கு அருந்ததிய குடும்பத்தில், ஒரு குடும்பமான வெங்கடேசனும், சசிகலாவும் குடியிருந்து வரும் வீட்டிற்கு அருகில் அரசு புறம்போக்கு இடமான 0.70 சென்டு இடத்தை நான்கு தலைமுறையாக அனுபவித்து வருகின்றார்கள். அந்த 0.70 சென்டு நிலத்தைச் சுற்றி வன்னியர் இனத்தைச் சேர்ந்த கோவிந்தராஜ், தனபால், தேவராஜ், முத்துசாமி ஆகியோர் சுமார் 4 ஏக்கருக்கு மேல் அரசு புறம்போக்கு (பாட்டை புறம்போக்கு) நிலத்தை ஆக்கிரமித்து அனுபவித்து வருகின்றனர்.



இருதரப்பினரும் அரசு புறம்போக்கு இடத்தை அனுபவித்து வருகிறார்கள். ஆனால் ஆதிக்க சாதியினரான வன்னியர்கள் கடந்த 8 ஆண்டுகளாக அருந்ததியர்களை நிலத்தை விட்டு விரட்ட தொடர்ந்து அவர்களை மிரட்டியும், துன்புறுத்தியும் வந்துள்ளனர். ஏனென்றால் அருந்ததியர்கள் வைத்திருந்த 0.70 சென்டு நிலமும் ஆதிக்க சாதியினருடைய நிலத்திற்கு நடுவில் இருந்ததால் அது அவர்களுடைய கண்களை உருத்தியுள்ளது. அருந்ததியரான வெங்கடேசன் குடும்பத்திற்கு ஆதிக்க சாதியினரால் தொடர்ந்து மிரட்டலும், நிலப்பிரச்சனையும் இருந்ததால், இது தொடர்பாக மங்களம் காவல் நிலையத்திலும், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களிடமும் 2012 முதல் மனுக்களும், புகார்களும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், பிரச்சனை சம்மந்தமாக அரசு அதிகாரிகள், இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காமல் மெத்தனமாக இருந்து கொண்டு வந்துள்ளனர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே அருந்ததியரான வெங்கடேசன் என்பவர் அனுபவித்து வரும் அரசு புறம்போக்கு நிலத்தின் குறுக்கே ஆதிக்க சாதியினரான வன்னியர்கள் அனுபவித்து வரும் அரசு புறம்போக்கு நிலத்திற்குத் தண்ணீர் எடுத்துச் செல்ல வெங்கடேசனின் அனுமதியின்றி குழி தோண்டி குழாயைப் புதைத்துள்ளனர். ஒவ்வொரு முறையும் ‘பைப் உடைஞ்சுருச்சு’ என்று மண்ணைத் தோண்டி அருந்ததியர் வெங்கடேசன் பயிரிட்ட நிலத்தை நாசம் செய்வது வழக்கம்.

14.02.2020 அன்று ‘பைப் உடைந்ததற்கு காரணம் வெங்கடேசனும், அவரது மனைவி சசிகலாவும் தான்’ என்று எண்ணிக்கொண்டு இரவு 1 மணிக்கு ஆதிக்க சாதியினரான வன்னியர்கள் 4 பேர், மோட்டார் சைக்கிள்களில் வந்தனர்.

‘இந்த நேரத்தில இங்க ஏன் வந்தீங்க’ என்று வெங்கடேசனின் மனைவி சசிகலா கேட்டதற்கு ‘பைக்க மேலே ஏத்தி கொன்னுடுவோம்’ என மிரட்டிவிட்டுச் சென்றனர்.



மறுநாள் காலை 15-02-2020 அன்று, இரவு வீட்டிற்கு வந்து மிரட்டி சென்ற அதே 4 நபர்களும் இருசக்கர வாகனங்களில் அருந்ததியரான வெங்கடேசன் வீட்டில் இல்லாத நேரத்தில் அவருடைய வீட்டிற்கு வந்து “டேய் சக்கிலி தெவிடியா பையா, உனக்கு நிலம் ஒரு கேடா? உங்களுக்கு திமிரா?” என அசிங்கமாக வெங்கடேசனின் அப்பா தேவராஜைப் பார்த்து கேட்டனர். அதற்கு வெங்கடேசனின் தந்தை தேவராஜ் “எங்க நிலத்தில பைப்ப பொதச்சிட்டு எங்க சாதி பேர சொல்லி திட்டுறியா? என்று கேட்டார். ‘சக்கிலி நாயே! என்னை எதித்து பேசலாமா?” என்று மண்வெட்டியை தூக்கிக் கொண்டு ‘கொன்னு போட்டுடுவோம்’ என்று வன்னியரான கோவிந்தராசும், முனுசாமியும் மிரட்டினார்கள்.

அருந்ததியரான வெங்கடேசின் மனைவி சசிகலா ஆதிக்க சாதியினரை நோக்கி ‘எங்க மாமனாரையே அடிச்சிருவீங்களா? என்று ஆதிக்க சாதியினரான (வன்னியர்) கோவிந்தராஜையும், முனுசாமியையும் நோக்கி கேட்டார். ஆத்திரமடைந்த கோவிந்தராஜ் சற்றும் எதிர்பாராத நேரத்தில் வெங்கடேசனின் மனைவி சசிகலாவின் கண்ணத்தில் ஓங்கி அறைந்தான். அந்த தாக்குதலில் நிலைகுலைந்து சசிகலா கீழே விழுந்துவிட்டார்.

சசிகலாவின் மாமனாரும் வெங்கடேசனின் தந்தையுமான தேவராஜ் எவ்வளவோ தடுத்தும் கோவிந்தராஜனுடன் இருந்த முனுசாமி கீழே விழுந்து கிடந்த சசிகலாவின் அடி வயிற்றில் ஓங்கி எட்டி உதைத்தான். ஒரே உதையில் சசிகலாவின் உயிர் பறிபோனது. உயிர் பறி போனதைக் கண்டு சசிகலாவின் மாமனார் தேவராஜ் கூச்சலிட்ட போது வன்னியர் 4 பேரும் அங்கிருந்து ஓடி விட்டனர்.

தகவல் அறிந்த சசிகலாவின் கணவர் வெங்கடேசன் உடனே மங்களம் காவல் நிலையத்தில் புகார் அளித்ததின் பேரில் சசிகலாவின் உடலை உடற்கூறு ஆய்விற்காக திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பிரேத பரிசோதனைக்குப் பிறகு 'வெங்கடேசனின் மனைவி அடித்து கொலை செய்யப்பட்டார்' என்பது உறுதி செய்யப்பட்டது. புதைக்கக் கூட இடமில்லாத வெங்கடேசன் குடும்பத்தினர் வேறு வழியின்றி தாங்கள் அனுபவத்தில் இருந்த அரசு புறம்போக்கு நிலத்தில் ஒதுக்குப்புறமாக சசிகலாவின் உடலைப் புதைத்தார்கள்.



தகவலறிந்து 20-02-2020 அன்று அகல் பணியாளர்களும், மற்ற தோழமை இயக்கமான தலித் விடுதலை இயக்கம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னனி, அம்பேத்கர் பேரவை, தமிழ்ப் புலிகள் கட்சி மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தோழர்களுடன் இணைந்து, காட்டுத்தெள்ளூருக்குச் சென்று பாதிக்கப்பட்ட அருந்ததியரான வெங்கடேசன் குடும்பத்திற்கு ஆறுதல் கூறிவிட்டு, அநியாயமாக கொலை செய்யப்பட்ட வெங்கடேசனின் மனைவி சசிகலாவிற்கு நீதி கிடைக்க வேண்டுமென்று அறவழியில் போராட்டத்தை மேற்கொள்ள இயக்கத் தோழர்களால் முடிவு செய்யப்பட்டது.

முடிவு செய்யப்பட்டதன் பேரில் 27.02.2020 அன்று வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன்னாள் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு பிறகு பிரச்சனைக்கு தீர்வு காண இயக்கத் தோழர்கள் அனைவரும் இணைந்து

சேத்பட்டு வட்டாட்சியரையும், செய்யாறு வருவாய் வட்டாட்சியரையும் சந்தித்து தங்களின் கோரிக்கைகளான

- இறந்த சசிகலாவின் கணவர் வெங்கடேசனுக்கு அரசு வேலையும்,
- பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.50 லட்சம் இழப்பீடும்,
- ஆதிக்க சாதியினரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு நிலமான 4 ஏக்கர் நிலத்தை மீட்டும், பாதிக்கப்பட்ட குடும்பத்தின் அனுபவத்தில் இருந்த 0.70 சென்டு நிலத்திற்கும் சேர்த்து பட்டா வழங்க வேண்டியும்,
- பாதிப்பு ஏற்படுத்தியவர்களுக்கு 60 நாட்களுக்குள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் தண்டனை வழங்க வேண்டியும்,
- பாதிக்கப்பட்ட அருந்ததியரான வெங்கடேசன் மற்றும் சசிகலாவின் குழந்தைகளுக்கு நிரந்தர கல்வி உதவி

தர வேண்டியும் கோரிக்கைகளை முன் வைத்தனர்.






அதற்கு அரசு அதிகாரிகள் “உங்கள் கோரிக்கைகளை நாங்கள் மேலிடத்திற்கு அனுப்பி வைக்கின்றோம்” எனக் கூறினார்கள். பிறகு அந்த பாட்டை புறம்போக்கு நிலத்தை நாளை (28-02-2020) அளவீடு செய்து நிலத்தை மீட்டு, பட்டா வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதாக வாக்குறுதி கொடுத்துள்ளனர். அநீதிக்கு ஒரு நீதி கிடைக்கும் என காத்துக்கொண்டுள்ளனர் காட்டுத்தெள்ளூர் அருந்ததிய மக்கள்.

**செல்வன். மாதவன்**
மக்கள் மாமன்ற பரப்புரையாளர்

# வாழும் இடத்திலும் பிரச்சனை, மாற்று இடத்திலும் பிரச்சனை

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், சத்தியமங்கலம் கிராமத்தில் இரு ஏரிகள் உள்ளன. 'சித்தேரி' என்ற ஏரிக்கு ஒதுக்குப்புறமாக 35 அருந்ததிய குடும்பங்கள் 100 ஆண்டுகளுக்கு மேலாகவும், மசூதித் தெருவில் 20 தலித் முஸ்லீம் குடும்பங்கள் 50 ஆண்டுகளுக்கு மேலாகவும் வாழ்ந்து வருகின்றார்கள், 'பெரியேரி' என்ற ஏரிக்கு ஒதுக்குப்புறமாக, செட்டித் தெருவில் 111 தெலுங்கு செட்டிய குடும்பங்கள் 50 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார்கள். மாநில அரசு கொண்டு வந்த அரசு ஆணைக்கிணங்க, 6 (2014) ஆண்டுகளுக்கு முன்னால் 'பெரியேரி' மற்றும் 'சித்தேரி' நீர்ப்பிடிப்பு ஏரிபுறம்போக்கில் வாழும் அருந்ததிய, முஸ்லீம், தெலுங்கு செட்டிய குடும்பங்களை அப்புறப்படுத்தி மாற்று இடம் கொடுக்க முடிவு செய்யப்பட்டது.

அரசாணையின் படி சோ. குப்பம் போகும் வழியில் உள்ள இராஜாபாளையத்தில் குடும்பத்திற்கு 3 செண்டு நிலம் என்று அரசாங்கத்தால் 6 ஆண்டுகளுக்கு முன்பு 'சமத்துவபுரம்' என்ற பெயரில் 166 குடும்பத்திற்கும் பட்டா வழங்கப்பட்டது. ஆனால், இராஜாபாளையத்தில் அரசாங்கத்தால் எந்தவொரு அடிப்படை வசதியும் செய்து தரப்படவில்லை. அந்த இடம் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாகவும் இல்லை. ஏதோ 'சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்' என்ற நோக்கில் நீராதார வசதியில்லாத, போக்குவரத்து வசதியில்லாத இடத்தை மக்களுக்கு வழங்கியதால் கடந்த ஆறு ஆண்டுகளாக யாரும் அங்கு சென்று குடியேற முடியவில்லை.



இராஜாபாளையத்தில் நிலம் ஒதுக்கப்பட்ட போதிலும் அடிப்படை வசதி கூட இல்லாத காரணத்தால் மக்கள் 'பெரியேரி' மற்றும் 'சித்தேரி' ஏரி புறம்போக்கிலேயே தொடர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் தற்போது 'ஆக்கிரமிப்பை அகற்றி நீராதாரத்தை பெருக்குவோம்!'

என்ற பேரில், அதே சத்தியமங்கலத்தைச் சேர்ந்த நிக்கோலஸ் மற்றும் தேசிங்ராஜா இவர்களின் தூண்டுதலின் பேரில் 166 குடும்பங்களுக்கும் எச்சரிக்கை நோட்டீஸ் 23.01.2020 தேதி அன்று அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்டது. அதிலே '21 நாட்களுக்குள் நீர்ப்பிடிப்பு பகுதியில் வாழும் 166 குடும்பங்களும் இடத்தை காலி செய்ய வேண்டும்' என்றும், 'தவறும் பட்சத்தில் வீடுகள் இடித்து அப்புறப்படுத்தப்படும்' என்றும் எழுதியிருந்தது.

50 ஆண்டுகளுக்கும் மேலாக ‘பெரியேரி’ மற்றும் ‘சித்தேரி’ ஏரிபுறம்போக்கில் வாழும் அருந்ததிய, முஸ்லீம் மற்றும் செட்டியார் குடும்பங்கள் குடும்ப அட்டை, வாக்களர் அடையாள அட்டை, மின் இணைப்பு, ஆதார் அட்டை என அனைத்தும் பெற்று விட்ட நிலையில், இது மட்டுமல்லாமல் வீட்டு வரி வருடா வருடம் செலுத்துப்பட்டிருக்கும் நிலையில், தீடீரென்று 50 ஆண்டுகள் அனுபவத்தில் இருந்த வீட்டை விட்டு 'காலி செய்ய வேண்டும்' என்று சொல்வது வேலியே பயிரை மேய்வது போல இருக்கிறது. கடந்த 50 ஆண்டுகளாக ‘பெரியேரி’ மற்றும் ‘சித்தேரி’ ஏரி புறம்போக்கில் வாழும் அருந்ததிய, முஸ்லீம் மற்றும் செட்டியார் குடும்பங்கள் சிறுக சிறுக சேமித்து குழந்தைகளின் எதிர்காலத்திற்காக குடிசைகளை கல்வீடுகளாக மாற்றியுள்ளனர். காரணம் ‘நாம் சந்தித்த வேதனைகளை எதிர்வரும் தலைமுறைகள் எதிர்கொள்ள வேண்டாம்’ என்ற நல்ல நோக்கமே அன்றி வேறில்லை. பிரச்சனைக்குத் தீர்வு காணும் பொருட்டு 24.1.2020 அன்று கூட்டு முயற்சியாக அருந்ததியர் மக்கள் நலச் சங்கக் கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் ‘அனைத்து இன மக்களையும் ஒன்று கூட்டி பிரச்சனை குறித்து பேசி முடிவெடுக்கலாம்’ என தீர்மானிக்கப்பட்டது.





தீர்மானத்தின் அடிப்படையில் 24.01.2020 அன்றே அனைத்து இன மக்களையும் கூட்டி கூட்டம் வைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மூன்று முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. 25.01.2020 அன்று சட்ட மன்ற உறுப்பினரைச் சந்தித்து மாற்று இடப் பிரச்சனை குறித்து முறையீடு செய்தல்.
2. 26.01.2020 அன்று கிராம சபை கூட்டத்தில் மாற்று இடப் பிரச்சனை குறித்து தீர்மானம் நிறைவேற்றுதல்.
3. 27.01.2020 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்தல் என முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் முடிவு செய்ததை அடுத்து, 25.01.2020 மாற்று இடப் பிரச்சனை குறித்து செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு. K.S.மஸ்தான், M.L.A. அவர்களைச் சந்தித்து மனு கொடுக்கப்பட்டது. அதற்கு அவர் மாற்று இடப்பிரச்சனை குறித்து நேரில் வந்து பார்வையிடுவதாக உறுதியளித்தார்.

26.01.2020 குடியரசு தினத்தன்று பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் கிராம சபா கூட்டத்தில் கலந்து கொண்டு மாற்று இடப்பிரச்சனை குறித்து தீர்மானம் நிறைவேற்றச் சொன்ன போது, அதனை அக்கூட்டம் நிராகரித்தது. ஏனென்றால் சட்டச் சிக்கல் இருப்பதால், மாற்று இடப் பிரச்சனைக்கு வேறு தீர்வு எதுவுமில்லை என்றும், 'வேண்டுமென்றால் கொடுக்கப்பட்ட மாற்று இடத்திற்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்' என அக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் திருமிகு. K.S.மஸ்தான், M.L.A. அவர்கள் சத்தியமங்கலம் கிராமத்தை 02.02.2020 அன்று வந்து பார்வையிட்டு 'நீர்ப்பிடிப்பு பகுதிக்கும், மக்கள் வாழும் பகுதிக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை' என உறுதி அளித்து 'தொடர்ந்து இதற்காக முயற்சிகள் எடுக்கப்படும்' என வாக்குறுதியளித்தார்.

04,05,06-03-2020 ஆகிய நாட்களில் நில அளவீட்டாளரால் 'பெரியேரி' மற்றும் 'சித்தேரி' பகுதியில் உள்ள இடங்கள் அளக்கப்பட்டு கல் வைக்கப்பட்டுள்ளது.



இனி என்ன நடக்கும் என்பது தெரியாத நிலையில் மக்கள் ஒவ்வொரு நாளும் மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள்.

**செல்வி. கரோலின்**
மக்கள் மாமன்ற பயிற்சியாளர்



**திரு.முருகன்**
இலயோலா ஓட்டுநர் பயிற்சி
பள்ளி பயிற்றுவிப்பாளர்



**திரு.ஆசைத்தம்பி**
விழுப்புரம்
மாவட்ட ஒருங்கிணைப்பாளர்



**செல்வன்.தனசேகரன்**
பராமரிப்பு மேலாளர்



**செல்வன்.கார்த்தி**
திருவண்ணாமலை மாவட்ட
ஒருங்கிணைப்பாளர்



**செல்வன்.மாதவன்**
மக்கள் மாமன்ற
பரப்புரையாளர்



**திரு.ஜான்சன்**
பயிற்சி ஒருங்கிணைப்பாளர்



**திருமதி. ஆரோக்கியமேரி**
தையற் பயிற்சி பயிற்சியாளர்



**செல்வி.கரோலின்**
மக்கள் மாமன்ற திறன்
வளர்ப்பாளர்



**திருமதி.தனபாக்கியம்**
சமையலாளர்



**திருமதி. சூசைமேரி**
சமையலாளர்

# அகல் இயேசு சபை குழுமம்



அருள்பணி. வேதநாயகம் சே.ச.
ஆன்ம குரு, பாண்டிச்சேரி.



அருள்பணி.மரியநாதன் சே.ச.
இயக்குநர், அகல் மையம்.



அருள்பணி. இராயப்பன் சே.ச.
திட்ட இயக்குநர், அகல் மையம்.



அருள்பணி. கென்னடி சே.ச.
இயக்குநர், ஜெசிம்.



அருள்பணி. பிலிப் சே.ச.
இயக்குநர், பரமன்கேனி.



அருள்பணி. வெனிஷ் சே.ச.
இணை இயக்குநர், ஜெசிம்.



சகோ. அமல்ராஜ் சே.ச.
உதவி திட்ட இயக்குநர், அகல் மையம்.



சகோ. விகாஷ் சே.ச.
துணை இயக்குநர், ஜெசிம்.